People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்

1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-03
# 01.02.2009 முதல் 07.02.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 1. | 01.02.09 | **சென்னை மாவட்டம் :** திருக்கோவிலூர் அருகே உள்ள துலாம்பூண்டி கிராமத்தை சேர்ந்த எழுமலை (28) இவர் சென்னை சேத்துப்பட்டு ஹாரிங்டன் ரோட்டில் உள்ள பழக்கடையில் வேலை பார்த்தார். இவரது மனைவி மீனா. இவருக்கும் 2 1/2 வயதுள்ள நந்தினி என்ற பெண் குழந்தை உள்ளது. இருவரிடையே உள்ள கருத்து வேறுபாட்டின் காரணமாக திருட்டுத்தனமாக இரண்டாவது திருமணம் செய்ய முயன்றார். இது குறித்து சேத்துபடப்டு போலீசார் விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 2. | 01.02.09 | **மதுரை மாவட்டம் :** மதுரை அருகே உள்ள திருநகர் காவல் நிலையத்தில் காவலராக இருப்பவர்கள் மனோகரன், முத்துபாண்டி, காளிராசு இவர்கள் சந்தானம் என்பவரை விடுவிப்பதற்காக 10 ஆயிரம் ரூபாய் லஞ்சம் கேட்டதாக லஞ்ச ஒழிப்புத்துறை காவலர்களால் கைது செய்யப்பட்டு பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். | லஞ்சம் | தமிழ்ஓசைச |
| 3. | 01.02.09 | **தர்மபுரி மாவட்டம் :** பொன்னகரனம் வட்டார வளர்ச்சி அலுவலகத் 500 ரூபாய் கையூட்டு வாங்கியதாக இளநிலை உதவியாளர் உதயக்குமார் கையூட்டு ஒழிப்பு காவல் துறையினர் கைது செய்தனர். | லஞ்சம் | தமிழ்ஓசை |
| 4. | 01.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** ஆலங்குளம் ஒன்றியம் கழுநீர்குளம் ஊராட்சியல் இரட்டைக்குவளை முறை உள்ளதாகவும் இதை ஒழிக்க ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலத்தை முற்றுகையிட்டு கோரிக்கை மனு கொடுத்தனர். | தலித்துகள் மீதான வன்முறை | தமிழ்ஓசை |
| 5. | 01.02.09 | **சேலம் மாவட்டம் :** ஓமலூர் வட்டம் ஜலகண்டாபுரம் அருகே உள்ள கரிக்காபட்டியைச் சேர்ந்தவர் செல்வம். இவரது மனைவி லதா. இவர்களுக்கு புவனஸ்ரீ (3) பவித்ரா 7 மாதம் என்ற குழந்தைகள் இருந்தனர். இந்த இரண்டு குழந்தைகளுக்கும் லதா போலீயோ சொட்டு மருந்து கொடுத்து வீடு திரும்பும் போது 7 மாத குழந்தை மயங்கி இறந்தது. குழந்தை சாவில் மர்மம் என ஜலகண்டாபுரம் போலீசில் புகார். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 6. | 01.02.09 | **மதுரை மாவட்டம் :** திருமங்கலம் அருகே டி. கல்லுப்பட்டியில் இருந்து பேரையூர் செல்லும் சாலையில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி அருகே உள்ள வயல்பாடடில் 65 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் விஷம் குடித்து இறந்து கிடந்தார். இது குறித்து சமயநல்லூர் போலீசார் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 7. | 01.02.09 | **மதுரை மாவட்டம் :** சித்தாலை குருவானந்தபுரத்தைச் சேர்ந்தவர் மலைராஜ் மகன் | பெண்களுக்கு எதிரான | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | புரணாதேவி (19) இவரை அதே பகுதியை சேர்ந்த பாலமுருகன் (25) 5 பவுன் செயின், ரொக்கப்பணம் 27,500 வுடன் தனது மகளை கடத்தி விட்டதாக திருமங்கலம் போலீசில் புகார். | வன்முறை | |
| 8. | 02.02.09 | **மதுரை மாவட்டம் :** ஆலங்குளத்தைச் சேர்ந்தவர் பரமசிவம் இவரது மனைவி புஷ்பா (29) கணவன் மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனையில் பஷ்பா தன் பெற்றோர் வீட்டிற்கு வந்து விட்டார். பரமசிவம் புஷ்பா 10 பவுன் நகை வரதட்சணையாக கொண்டு வந்தால் தான் வீட்டிற்கு வர வேண்டும் என்று மிரட்டியதில் மனமுடைந்த புஷ்பா தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து கூடல்நகர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 9. | 02.02.09 | **மதுரை மாவட்டம் :** கீழவளவு அருகே கொடுக்கம்பட்டியைச் சேர்ந்தவர் முகமது மீரான் (31) இவரது மனைவி சித்திகா (29) கணவன் மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனையில் சித்திகா தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 10. | 03.02.09 | **மதுரை மாவட்டம் :** ஒத்தக்கடை அருகே திருமோகூர் பெருங்குடியைச் சேர்ந்த மந்தைவீரன் மனைவி சுப்புலட்சுமி (35) இருவருக்கும் பிரச்சனை காரணமாக உடலில் மண்ணெணைய் ஊற்றி தற்கொலை செய்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 11. | 03.02.09 | **திருச்சி மாவட்டம் :** திருப்பூர் சாமுண்டிபுரம் ஏ.வி.எம். நகரை சேர்ந்தவர் பழனிச்சாமி (48) நேற்று முன்தினம் இவர் வங்கியில் இருந்த 75 ஆயிரம் ரூ. எடுத்து வெளியே வந்தார். அதை 2 பேர் திருடி சென்றனர். திருடியது திருச்சி திருவெறும்பூரை சேர்ந்த பழைய குற்றவாளி கிருஷ்ணசாமி (45) அவரை திருச்சியிலிருந்து கோவை கொண்டு செல்லும் போது நெஞ்சு வலி வந்து இறந்தார். | காவல் வன்முறை | தினகரன் |
| 12. | 03.02.09 | **திண்டுக்கல் மாவட்டம் :** ஆத்தூரில் 28.06.2008 வரும் முன் காப்போம் மருத்துவ முகாம் நடந்தது. அந்த முகாமில் பங்கேற்ற முதியவர்களிர் சிலர் தங்களுக்கு பார்வை குறைபாடு உள்ளதாக தெரிவித்தனர். இவர்களுக்கு திண்டுக்கல் அரசு ஆஸ்பத்திரியில் கண் அறுவை சிகிச்சை ஏற்பாடு செய்தனர். இது குறித்து மாவட்ட ஆட்சியரிடம் புகார். | டாக்டர்கள் அலட்சிய போக்கு | தினமலர் |
| 13. | 03.02.09 | **இராமநாதபுரம் மாவட்டம் :** முதுகுளத்தூர் அருகே ஆதங்கொத்தங்குடி கிராமத்தைச் சேர்ந்த 8ம் வகுப்பு படிக்கும் அழகரின் மகன் திருமுருகன் அருந்ததிய மாணவனை கழுத்தில் மிதித்து இடுப்பில் கடுமையாக உதைத்து கொடுமைப்படுத்திய முத்துபாண்டியை கைது செய்யாமல் பாதிக்கப்பட்ட மாணவரின் தந்தை அழகி ரி கைது செய்து பொய் வழக்கு போட்டு சித்திரவதை செய்த சம்பவம். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 14. | 03.02.09 | **நாகப்பட்டினம் மாவட்டம் :** தலித் சமைபலர் சமைக்கும் சத்துணவை சாப்பிடாத அளவிற்கு நிலவும் தீண்டாமை கொடுமைகளை களை வேண்டும் என்று மாவட்ட நிர்வாகத்திற்கு தீண்டாமை ஒழிப்பு முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது. | தீண்டாமை வன்கொடுமை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 15. | 03.02.09 | **திருவாரூர் மாவட்டம் :** அருகே முன் விரோதத்தில் பெண்ணை தாக்கி பிளேடால் கீறி மானப்பங்கம்படுத்திய 3 பேரை போலீசார் தேடி வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 16. | 03.02.09 | **நாகப்பட்டினம் மாவட்டம் :** மயிலாடுதுறை சேர்ந்த மகேந்திரன் என்பவர் தனது அண்ணன் கிருஷ்ணமூர்த்தி மனைவி மஞ்சுளா வேளாங்கன்னி லாட்ஜில் கொலை செய்த சம்பவம். | பெண்களுக்கு எதிரான வன்முறை | திருமுகம் |
| 17. | 03.02.09 | **நாகப்பட்டினம் மாவட்டம் :** திடீர்குப்பம் மீனவர் காலனியைச் சேர்ந்தவர் சவுந்தரராஜன் மகன் வேல்முருகன் (26) இவர் குடிபோதையில் பக்கத்து விட்டு 4 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சி. இது குறித்து நாகை டவுன் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | திருமுகம் |
| 18. | 03.02.09 | **நாகப்பட்டினம் மாவட்டம் :** வேதாரண்யம் அடுத்த அவரிக்காடு பகுதியில் 40 தலித் குடும்பங்கள் வசித்து வரும் பகுதியில் வீட்டிற்கு செல்ல தனிப்பாதை கேட்டு ஓராண்டாக பல்வேறு போராட்ங்களை நடத்தி வருகின்றனர். அந்த பாதையை ஆக்கிரமிப்பு செய்துள்ள வீராசாமிக்கு சம்மன் வழங்க கிராம உதவியாளர் இளங்கோ சென்றபோது விராசாமி மற்றும் அவரது உறவினர்கள் தாக்கினர். இது குறித்து தலைஞாயிறு காவல் நிலைத்தில் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | திருமுகம் |
| 19. | 03.02.09 | **நாகப்பட்டினம் மாவட்டம் :** முத்துப்பேட்டை அடுத்துள்ள எடையூர் காவல் நிலையத் ஏட்டாக பணியாற்றி வருபவர் சுப்பிரமணியன் (52) இவர் குடிபோதையில் பொது மக்களிடம் தகராறில் ஈடுபட்டதாக முத்துப்பேட்டை இன்ஸ்பெக்டர் சின்னசாமி வழக்கு பதிவு செய்து கைது செய்தார். | காவல் வன்முறை | திருமுகம் |
| 20. | 03.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** பனைவடலிசத்திரத்தை அடுத்த ஆயான்பட்டியைச் சேர்ந்தவர் முகேஷ் (5) பாளையில் உள்ள பள்ளி விடுதியில் தங்கி 9ம் வகுப்பு படித்த மாணவனை காலையில் எழுந்து படிக்கவில்லை என்பதால் வார்டன் அடித்துள்ளார். இது குறித்து பாளை போலீசில் புகார். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | கணேசன் RMA |
| 21. | 03.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** சங்கரன்கோவில் அடுத்த செந்தட்டி கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் ஊர் தலைவர் ரா. சுப்பிரமணியன் தலைமையில் கோவில் திருவிழா நடத்த அனுமதி கேட்டு நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் முற்றுகை | தலித்துகள் மீதான வன்முறை | கணேசன் RMA |
| 22. | 03.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** பேட்டை சத்யாநகரைச் சேர்ந்த முத்துபாண்டி மகள் இந்திரா (16) இவர் பேட்டை காமராஜ் பள்ளியல் 9ம் வகுப்பு படித்து வந்தார். இவரை அதே பள்ளியில் படிக்கும் அண்ணாநகரைச் சேர்ந்த ஒரு மாணவி மாணவர்கள் ஒருவருடன் ஒப்பிட்டு கேலி செய்துள்ளார். இதனால் மனமுடைந்த இந்திரா தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து பேட்டை போலீசார் விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | கணேசன் RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| 23. | 03.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** பாளையங்கோட்டை சாரான் தக்கர் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் நிர்வாக பிரச்சனையால் 34 மாணவிகள் தேர்வில் தோல்வி அடைந்து உள்ளனர் என்று மதுரை ஐகோர்ட் கிளையில் மாணவிகள் வழக்கு. | பள்ளி வன்முறை | கணேசன் RMA |
| 24. | 03.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** ஆலங்குளம் அருகே கழுநீர்குளம் பஞ்சாயத்து இந்த பஞ்சாயத்திற்கு உட்பட்ட கல்லூத்தில் இரட்டை குவளை முறை கடைப்பிடிக்கப்படுவதாக இதை எதிர்த்து கேட்ட 42 குடும்பங்களைச் சேர்ந்த அருந்ததியர்களை ஊரை விட்டு விலக்கி வைத்துள்ளார்கள். 4 வது வார்டு உறுப்பினர் சமுத்திரபாண்டி கலெக்டரிடம் புகார் இது குறித்து தென்காசி டி.எஸ்.பி மயில்வாகணம் விசாரணை செய்தார். இவர் புகார் கொடுத்த நபர்கள் மீது கொலை முயற்சி பதிவு செய்யுமாறு கூறினார். | தலித்துகள் மீதான வன்முறை | கணேசன் RMA |
| 25. | 03.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** பணக்குடி புஷ்பவனம் வடக்கு தெருவைச் சேர்ந்தவர் கண்ணன் என்பவரை போலீஸ் விசாரணைக்கு அழைத்து சென்றவர் வீடு திரும்பவில்லை. இவரது மனைவி பங்கஜம் நெல்லை நீதிமன்றத்தில் புகார். இது குறித்து ராதாபுரம் தாசில்தார் போலீஸ் விசாரணைக்கு அழைத்துச் சென்றவரை கண்டுபிடித்து கோர்டில் ஆஜர்படுத்த வேண்டும் என்று உத்தரவிட்டது. | காவல் வன்முறை | கணேசன் RMA |
| 26. | 03.02.09 | **தூத்துக்குடி மாவட்டம் :** உடன்குடியில் புதிய அனல் மின் நிலையம் அமைப்பது தொடர்பாக நடந்த கருத்து கேட்பு கூட்டத்தில் மீனவர்கள் ஒட்டு மொத்தமாக எதிர்ப்பு தெரிவித்தனர். | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | |
| 27. | 03.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** ஜமீன்சிங்கம்பட்டி கிராம பஞ்சாயத்து தலைவர் முருகன் அதே ஊரைச் சேர்ந்த மலைப்பன் இங்கு எழுத்தராக பணிபுரிந்து வருகிறார். மலையப்பனுக்கும், முருகனுக்கும் கூட்ட ஏற்பாடு குறித்து செயலில் தகராறு ஏற்பட்டதால் பஞ். தலைவர் முருகன் அவரது தந்தை கந்தசாமி மலையப்பனை அடித்து உதைத்துள்ளார். இது குறித்து போலீசில் புகார். | | கணேசன் RMA |
| 28. | 03.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** சிவகிரி அருகே உள்ள ராயகிரியைச் சேர்ந்தவர் அருணாசலம் இவருடைன மகன் கருப்பையா. இவர் அந்த பகுதியைச் சேர்ந்த ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருப்பதாக கூறி அவர் மீது கட்டப்பஞ்சாயத்து பேசி அவருக்கு 1 லட்சம் அபராதம் விதித்து அந்த ஊர் நாட்டாமை மகன் தீர்ப்பு கூறியதாக கருப்பையா நெல்லை சரக போலீஸ் டி.ஐ.ஜி கண்காணிப்பாளரிடம் புகார். இது குறித்து நாட்டாமை மகன் கைது. | கட்டப்பஞ்சாயத்து | கணேசன் RMA |
| 29. | 03.02.09 | **ஈரோடு மாவட்டம் :** கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ரேகாமணி (34) இவருக்கும் சத்தியமங்கலம் ராஜன்நகர் பகுதியைச் சேர்ந்த சிவராஜன் என்வருக்கும் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. ரேகாமணி தூக்கு போட்டு | பெண்களுக்கு எதிரான வன்முறை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தற்கொலை செய்துள்ளார். இது குறித்து சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் புகார். | | |
| 30. | 03.02.09 | **ஈரோடு மாவட்டம் :** பெருந்துரை சிப்காட் வளாகத்தில் 65 தொழிற்சாலைகள் உள்ளன. அங்கு ஆடை ஏற்றுமதி ஆர்டர் ரத்தானதால் 5 ஆயிரம் தொழிலாளர்கள் சிப்காட்டில் வேலை இழப்பு. | வாழ்வுரிமை மீறல் | |
| 31. | 03.02.09 | **சேலம் மாவட்டம் :** ஓமலூரை அடுத்த ரெட்டிப்பூர் பகுதியை சேர்ந்த கூலி தொழிலாளி ராமசாமி அவருடைய மகள் சத்தியா (22) ஐந்து ஆண்டுகளுக்கு முன் அதே பகுதியில் உள்ள பாய்தளக் கூடத்தில் கூலி வேலை செய்த போது அங்கு வேலை செய்து வந்த மாதுவுடன் பழக்கம் ஏற்பட்டு மாதுவும் சத்யாவும் திருமணம் செய்து கொண்டனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 32. | 04.02.09 | **விருதுநகர் மாவட்டம் :** சிவகாசி பராசக்தி குடியிருப்பைச் சேர்ந்தவர் கண்ணன் இவரின் மகன் செபபாரதி (14). இவர் தேர்வில் குறைவான மதிப்பெண் பெற்றதால் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். | மாணவர் மீதான வன்முறை | |
| 33. | 04.02.09 | **வேலூர் மாவட்டம் :** ஆர்காட் வட்டம், ராணிபேட்டை மண்டங்காய் கிராமம் சேர்ந்த ஜெய்சங்கர் தோல் தொழிற்சாலையில் விசவாயு தாக்கி ஒருவர் இறப்பு மற்றும் இரண்டு ஊழியர்கள் மருத்துவமனையில் சிகிச்சை. | | |
| 34. | 04.02.09 | **தேனி மாவட்டம் :** பெரியகுளம் வட்டத்தில் உள்ள ஒரு பள்ளியில் ஆசிரியர்கள் மாணவர்களை அடித்து பின் மாணவர்களுக்கு டி.சி கொடுத்துள்ளனர். இதனால் மனமுடைந்த மாணவர்கள் தற்கொலை முயற்சி. | பள்ளி வன்முறை | |
| 35. | 04.02.09 | **ஈதோடு மாவட்டம் :** கோபி அருகே மொடச்சூர் பகுதியில் அரசு உயர்நிலைப்பள்ளி உள்ளது. குடியரசு தின விழாவில் கலந்து கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த இரு மாணவிகளிடம் சேகர் என்பவர் பாலியல் ரீதியாக தொந்தரவு கொடுத்துள்ளார். இது குறித்து கோபி போலிசில் புகார். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | பெருமாள் RMA |
| 36. | 04.02.09 | **கோவை மாவட்டம் :** பெருமாநல்லூர் புரத்துபாளையம் அய்யன்தோட்டம் பகுதியைச் சேர்ந்தவர் சாமிநாதன் பனியன் கம்பெனி நடத்தி வந்தார். இவரது மனைவி நதியா (25) கணவன் மனைவியிடையே ஏற்பட்ட குடும்ப தகராறில் விசம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து திருப்பூர் ஆர்.டி.ஓ முருகேஷ் விசாரணை நடத்தி வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | பெருமாள் RMA |
| 37. | 04.02.09 | **தஞ்சாவூர் மாவட்டம் :** தஞ்சாவூர் அருகே உள்ள வல்லம் பகுதியைச் சேர்ந்தவர் ஆரோக்கியதாஸ். இவரது மகள் ஆஷா (15). இவர் தனது வீட்டில் கோபித்துக் கொண்டு ஈரோடு மாவட்டம் பெருந்துரை அருகே பணிக்கம் பாளையத்தில் இருக்கும் தனது சித்தி வீட்டில் இருந்து வந்தார். அவரது சித்தி உனது பெற்றோரிடம் நீ இருக்கும் இடத்தை சொல்லப் | பெண்களுக்கு எதிரான வன்முறை | பெருமாள் RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போவதாக சொன்னார். இதனால் மனமுடைந்த ஆஷா தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். | | |
| 38. | 04.02.09 | **கன்னியாகுமரி மாவட்டம் :** நாகர்கோவில் வடிவீஸ்வரம் பெரிய தெருவைச் சேர்ந்தவர் நடராஜன் இவரது மகள் முத்துலெட்சுமி (25) இவருக்கும் அதே பகுதியைச் சேர்ந்த முருகன் என்பவருக்கும் 5 மாதங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. திருமணம் நடந்த 40 நாட்களிலிருந்து கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தி சித்திரவதை செய்யப்பட்டார். இது குறித்து வடிவீஸ்வரம் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை. வரதட்சணை கொடுமை | பெருமாள் RMA |
| 39. | 04.02.09 | **அரியலூர் மாவட்டம் :** ஜெயங்கொண்டத்தைச் சேர்ந்தவர் திருவரசன் (19) இவர் ஊட்டி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் முதலாம் ஆணடு படித்து வருகிறார். இவர் வகுப்பறையில் மயங்கி விழுந்து விட்டார். உடனே மற்ற மாணவர்கள் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். மருத்துவர்கள் அலட்சியத்தால் மாணவர் இறந்தார். | மருத்துவர் அலட்சியம் | பெருமாள் RMA |
| 40. | 04.02.09 | **கோவை மாவட்டம் :** கோவை குறிஞ்சி ஹவுசிங் யூனிட்டில் வசித்து வந்தவர் சாந்தி (எ) ஸ்டெல்லா ((32) இவர் பாலியல் தொழில் செய்து வந்தவர். கட்டிட தொழிலாளி அருள்ராஜ் என்பவருக்கும், சாந்திக்கும் ஏற்பட்ட தகராறில் அருள்ராஜ் சாந்தி கழுத்தை நெறித்து கொலை செய்தார். இது குறித்து குனியமுத்தூர் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | பெருமாள் RMA |
| 41. | 04.02.09 | **ஈரோடு மாவட்டம் :** சென்னிமலை அருகே உள்ள எம்.பி. என் காலனியைச் சேர்ந்தவர் காமராஜ் ஆசிரியர் இரண்டு குழந்தைகள் முதல் மகள் ரேணுகாதேவி (15) திடீரென்று தன் வீட்டில் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து சென்னிமலை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | பெருமாள் RMA |
| 42. | 05.02.09 | **தேனி மாவட்டம் :** ஆண்டிப்பட்டி அருகே தெப்பம்பட்டி ஆரம்பபள்ளியில் 5ம் வகுப்பு மாணவிகள் திவ்யா, சுலேச்சனா சரியாக படிக்காததால் பள்ளி ஆசிரியர் பெரியசாமி அடித்துள்ளார். இதனால் காயம் ஏற்பட்டதாக கூறி சுலேச்சனாவின் தாய் சங்கரேஸ்வரி ஆசிரியர் பெரியசாமியை தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார். ஆண்டிப்பட்டி போலீசில் புகார். | பள்ளி வன்முறை | தினமலர் |
| 43. | 05.02.09 | **சென்னை மாவட்டம் :** சென்னையில் கைது செய்யப்பட்ட வழக்கறிஞர்களை நீதிபதி முன் ஆஜர்படுத்த எதிர்ப்பு தெரிவித்த வழக்கறிஞர்கள் மீது போலீசார் தடியடி நடத்தினார்கள். | காவல் வன்முறை | தினமணி |
| 44. | 05.02.09 | **மதுரை மாவட்டம் :** கோமதிபுரம் அன்புநகரில் வசிப்பவர் கருப்பையா ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். இவரது மகள் சித்ரா (20) இவர் வயிற்று வலியின் காரணமாக வீட்டில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து கருப்பாயூரணி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |

| | | | | |
|---|---|---|---|---|
| 45. | 05.02.09 | **தர்மபுரி மாவட்டம் :** தேன்கனிக்கோட்டையை சேர்ந்தவர் முருகன். இவர் ஒரு கொலை வழக்கில் தண்டனை பெற்று வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இவரது மனைவி கருத்து வேறுபாடு காரணமாக தனியாக வசிக்கிறார். இந்நிலையில் தனது மனைவி ஜீவனாம்சம் தர வேண்டும் என்று நீதிமன்றத்தில் முருகன் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கில் முருகனுக்கும் அவரது மனைவிக்கும் ஜீவனாம்சம் கொடுக்க தேவையில்லை என்று கோர்டு தீர்ப்பு. இதனால் ஆத்திரமடைந்த முருகன் வக்கீல் சதீஸ்குமாரை தாக்கினார். இது குறித்து போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 46. | 05.02.09 | **வேலூர் மாவட்டம் :** ஜவ்வாதுமலை அல்லேரி கிராமத்தைச் சேர்ந்தவர் அண்ணாமலை கள்ளச்சாராய வியாபாரி இவரது மனைவி கலா. கணவன் மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனையில் ஏற்பட்டது. இதில் கலாவின் அக்கா உமா தட்டிக் கேட்டதால் அண்ணாமலை துப்பாக்கியால் உமாவை சுட்டார். இது குறித்து போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 47. | 05.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** புரியங்குடி பகுதியில் மணல் கடத்தலில் ஈடுபட்ட 3 சக்குந்துகள் ஒரு இழுவை ஊர்தியை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். | மணல் கடத்தல் | தமிழ்ஓசை |
| 48. | 05.02.09 | **இராமநாதபுரம் மாவட்டம் :** கீழக்கரை அருகே பலாத்தோப்பு என்ற மூனிகவரத்தைச் சேர்ந்தவர் முருகானந்தம் மகள் விக்னேசுவரி (17) தீராத வயிற்று வலியால் அல்லல்பட்டு விசம் குடித்து தற்கொலை. இது குறித்து கீழக்கரை காவல் துறையினர் வழக்கு பதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 49. | 05.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** தி.மலை அடுத்த கொசந்தவாடி சிற்றூரைச் சேர்ந்த தரணியின் கணவர் கிருட்டிணமூர்த்தி கடந்த 6 மாதத்திற்கு முன்பு இறந்து விட்டார். இதனால் கிருட்டிணமூர்த்திக்கும் சகோதரர்கள் வீட்டு மனை தொடர்பாக அடிக்கடி சண்டையிட்டதால் மனமுடைந்து தரணி தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 50. | 05.02.09 | **திண்டுக்கல் மாவட்டம் :** கொடைக்கானல் ஆனந்தகிரி பகுதியைச் சேர்ந்தவர் ஜெயவிக்னேசுவர் (18) இவர் திண்டுக்கல் அரசு மேல்நிலைப்பள்ளியில் 12ம் வகுப்பு படித்து வருகிறார். இவருடன் சத்யா என்ற மாணவரும் படித்து வருகின்றார். இருவருக்கும் முன் விரோதம் காரணமாக மாணவர் சத்யா உடன்படிக்கும் மாணவர் ஜெயவிக்னேசுவை தாக்கியுள்ளார். இது குறித்து கொடைக்கானால் காவல் துறையினர் வழக்கு பதிவு. | பள்ளி வன்முறை | தமிழ்ஓசை |
| 51. | 05.02.09 | **கோவை மாவட்டம் :** சங்கனூர் நடுநிலைப்பள்ளியில் பயிலும் 8 வயது மாணவியை பள்ளி ஆசிரியர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். இது குறித்து துடியலூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு. | பள்ளி வன்முறை | Indian Express |

| | | | | |
|---|---|---|---|---|
| 52. | 05.02.09 | **சிவகங்கை மாவட்டம் :** புவன்தி காவல்நிலையம் கண்கேன்குடி சேர்ந்த தலித் சமூகத்தைச் சேர்ந்த ராக்காய், க/பெ. ஆறுமுகம் என்பவரை ஆதிக்க சாதியைச் சேர்ந்த செல்வி மற்றும் முருகன் இருவரும் தாக்கிய சம்பவம். | தலித்துகள் மீதான வன்முறை | ஆனந்த் RMA |
| 53. | 05.02.09 | **வேலூர் மாவட்டம் :** வேலூர் காட்பாடி செம்பேடு கிராமம் அரசு பள்ளியில் மாணவர்கள் பள்ளி அருகில் உள்ள தோட்டத்தில் தண்ணீல் குடிக்கச் சென்றனர். அவர்களை தோட்டத்தின் உரிமையாளர் திட்டி அடித்து சித்ரவதை. | தலித்துகள் மீதான வன்முறை | பாஸ்கர் RMA |
| 54. | 06.02.09 | **திருச்சி மாவட்டம் :** வையம்பட்டி அருகே உள்ள ஊத்துப்பட்டியைச் சேர்ந்தவர் சக்திவேல். இவரது மகன் சரவணக்குமார் மனைவி பத்மினி (26) பத்மினி கர்ப்பம் அடைந்ததாக கருதி வையம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்றார். பத்மினியை பரிசோதனை செய்த டாக்டர் பொன்சாந்தி, பத்மினி 5 மாதம் கர்ப்பம் என்றும், ஜனவரி 26ந் தேதி பிரசவ நாள் என்று குறித்து கொடுத்தனர். ஆனால் குறித்த நாளில் வலி வரவில்லை என்று தனியார் மருத்துவமனையில் பார்க்கும் போது பத்மினி கர்ப்பம் அடையவிலலை என்றும் வையம்பட்டி ஆரம்ப சுகாதார நிலைய தலைமை டாக்டர்கள் மீது வையமபட்டி காவல் நிலையத்தில் புகார். | தவறான சிகிச்சை | தமிழ்சுடர் |
| 55. | 06.02.09 | **சிவகங்கை மாவட்டம் :** காரைக்குடியில் அரசு இடத்தில் இலவச வீட்டு மனை பட்டா வழங்கியதில் முறைகேட்டில் ஈடுபட்டதாக தாசில்தார் அருணாசலம், கிளார்க் நாகநாதன் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். | முறைகேடு | |
| 56. | 06.02.09 | **கோவை மாவட்டம் :** சேலம் மாவட்டம், வாழப்பாடியைச் சேர்ந்தவர் வடமலை (35) மனைவியை கொலை செய்த வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு கோவை மத்திய சிறையில் கடந்த 5 ஆண்டுகளாக அடைக்கப்பட்டிருந்தார். இவர் சிறையில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து சிறை கண்காணிப்பாளர் கோவிந்தராஜன் விசாரித்து பணியில் அஜாக்கிரதையாக இருந்த வார்டன் நடராஜனை சஸ்பெண்ட் செய்துள்ளார். | காவல் மரணம் | பெருமாள் RMA |
| 57. | 06.02.09 | **கோவை மாவட்டம் :** காந்திபுரம் 5வது கிராஸ் ரோட்டில் திருட்டு வீடியோ தடுப்பு அலுவலகம் செயல்பட்டு உள்ளது. இன்ஸ்பெக்டராக கிருஷ்ணசாமி ஏட்டு முகமதுகான் ஆசியோர் திருட்டு விசிடி தொடர்பாக 4 பேரை கைது செய்தனர். அவர்களை விடுவிக்க 10 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக லஞ்ச ஒழிப்புத்துறை காவலர்களிடம் புகார். | லஞ்சம் | பெருமாள் RMA |
| 58. | 06.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** சிவகிரி தாலுகா, புளியங்குடி இந்திரா காலணி சேர்ந்தவர் மருதய்யை என்பவரை புளியங்குடி காவல் நிலைய எஸ்.ஐ சிவன் விசாரணைக்கு அழைத்துச் சென்று சித்திரவதை. | காவல் நிலையச் சித்திரவதை | கணேசன் RMA |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 59. | 07.02.09 | **சிவகங்கை மாவட்டம் :** காரைக்குடி அருகே உள்ள அரண்மனை சிறுவயல் பகுதியைச் சேர்ந்தவர் சண்முகம். இவர் மீது பெண்ணை காரில் கடத்தி சென்று கொலை செய்தது, பணம் கேட்ட மிரட்டியது என பல்வேறு வழக்குகள் உள்ளது. தலைமறைவாக இருந்த சண்முகத்தை பிடிப்பதற்காக போலீஸ் தனிப்படை அமைக்கப்பட்டிருந்தது. சண்முகம் கல்லல் அருகே எழுமாப்பட்டியல் இருப்பதாக தகவல் கிடைத்தும். இன்ஸ்பெக்டர் ராதாகிருஷ்ணன் தலைமையில் காவலர்கள் சுற்று வளைத்தனர். இருவருடையே ஏற்பட்ட மோதலில் போலீசார் சண்முகத்தை சுட்டுக் கொன்றனர். | என்கவுண்டர் | |
| 60. | 07.02.09 | **கிருஷ்ணகிரி மாவட்டம் :** ஒசூர் வட்டம், பாகனூர் காவல் நிலையச் நாகராஜ் என்பவரை 4ந் தேதி ஆர்பாட்டம். அடித்து சித்திரவதை செய்யப்பட்டு சேலம் அரசு மருத்துவமனையில் அனுமதி. | காவல் நிலையச் சித்திரவதை. | |
| 61. | 07.02.09 | **தர்மபுரி மாவட்டம் :** பெம்முடி காவல் நிலையம் 4ம் தேதி ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களை அடித்து சித்திரவதை செய்யப்பட்டு சேலம் அரசு மருத்துவமனையில் அனுமதி. | காவல் நிலையச் சித்திரவதை. | |
| 62. | 07.02.09 | **இராமநாதபுரம் மாவட்டம் :** ராமேஸ்வரத்திலிருந்து மீன் பிடிக்க சென்ற மீனவர்களை நிர்வாணமாக ஐஸ் கட்டியின் மீது படுக்க வைத்து இலங்கை கடற்படையினர் சித்திரவதை. | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | |
| 63. | 07.02.09 | **ஈரோடு மாவட்டம் :** அந்தியூர் அருகே உள்ள அம்மாப்பேட்டை காவல் நிலையத்தில் சப்–இன்ஸ்பெக்டராக இருப்பவர் சந்திரன் (54) இவர் வாகன சோதனையின் போது லஞ்சம் வாங்கியதாக கைது செய்யப்பட்டார். | லஞசம | |
| 64. | 07.02.09 | **வேலூர் மாவட்டம் :** ஜோலார்பேட்டையில் இருந்து தினமும் காலை காட்பாடி வழியாக அரக்கோணத்துக்கு எக்ஸ்பிரஸ் ரயில் வேகமாக சென்றதால் பயணிகள் கீழே விழுந்தனர். இதனை கண்டித்து காட்பாடியில் பயணிகள் ரயில் மறியல் போராட்டம் நடத்தினர். இவர்கள் மீது போலீஸார் தடியடி நடத்தினர். | காவல் வன்முறை | |
| 65. | 07.02.09 | **மதுரை மாவட்டம் :** வாடிப்பட்டி அருகே கச்சகட்டியை சேர்ந்த கருப்பணன் சங்கரேஸ்வரி (16) இவர் தூக்கு மாட்டிற தற்கொலை. சங்கரேஸ்வரியின் உடலை போலீசுக்கு தகவல் கொடுக்காமல் உடலை எரித்து விட்டனர். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 66. | 07.02.09 | **மதுரை மாவட்டம் :** பி.பி சாவடியைச் சேர்ந்த நீலமேகம் மகன் குட்டிசெல்வம் (29) கொலை வழக்கில் கைதான இவர் ஜாமீனில் வெளி வந்தார். 2 நாட்களாக திடீரென மனநிலை பாதிக்கப்பட்டு பிளேடால் தனது கழுத்தை அறுத்து தற்கொலை முயற்சி. இது குறித்து எஸ்.எஸ். காலனி போலீசார் விசாரித்து வருகின்றனர். | | |
| 67. | 07.02.09 | **விருதுநகர் மாவட்டம் :** மம்சாபுரத்தில் கிவிழ்திபட்டி நாடார் மேல்நிலைபள்ளி உள்ளது. இந்த பள்ளியில் | பள்ளி வன்முறை | தினமணி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மம்சாபுரம் கீழக்கரைச் சேர்ந்த கே. மணிகண்டன், முருகேசன், முனீஸ்வரன், தங்கபாண்டி இடையங்குளம் கனகராஜ், சீனிவாசன் ஆகியோர் படித்து வருகின்றனர். இவர்களது வகுப்பில் மற்றொரு சமூகத்தை சேர்ந்த மாணவர்கள் இழிவுப்படுத்தி தாக்கியுள்ளனர். இது குறித்து மம்சாபுரம் மக்கள் காவல் நிலையத்தில் முற்றுகையிட்டனர். | | |
| 68. | 07.02.09 | **கன்னியாகுமரி மாவட்டம் :** களியங்காவிளை படந்தாலுமுடு ஆகிய இடங்கள் நேற்று முன் தினம் மணல் கடத்தி சென்ற 7 சரக்குந்துகளை அதிகாரிகள் கைப்பற்றினர். | மணல் கடத்தல் | தமிழ்ஓசை |
| 69. | 07.02.09 | **திருவள்ளுவர் மாவட்டம் :** இறப்பு சான்றிதழ் வழங்க 500 ரூபாய் கையூட்டு வாங்கிய பட்டரை பெருமந்தூர் சிற்றூர் நிர்வாக அலுவலர் மதியழகன் கைது. | லஞ்சம் | தமிழ்ஓசை |
| 70. | 07.02.09 | **கடலூர் மாவட்டம் :** வெள்ளஇடர் உதவி வழங்கக் கடலூர் அருகே கோதண்ட வளாகத்தைச் சேர்ந்த கண்ணனிடம் நேற்று ரூ. 2 லட்சம் கையூட்டு வாங்கிய நிர்வாக அலுவலர் உதயகுமார் கைது. | லஞ்சம் | தமிழ்ஓசை |
| 71. | 07.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** பேட்டை ராம் நகரைச் சேர்ந்த தலித் சமூகத்தைச் சேர்ந்த நெல்லைப்பன் என்பவரை மாநகராட்சி உறுப்பினர் அப்துல் வகாப் என்பவர் பொய் புகார் கொடுத்து காவலர் மீது மிரட்டல் | அதிகார துஷ்பிரயோகம் | கணேசன் RMA |
| 72. | 07.02.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** பாளையங்கோட்டை தாலுகா, முன்னீர்பள்ளம் ஜெ.ஜெ. நகர் சேர்ந்த சுந்தரி என்பவரை வரதட்சணைக் கேட்டு கணவரும், குடும்பத்தினரும் மிரட்டல். | பெண்கள் மீதான வன்முறை. வரதட்சணை கொடுமை | கணேசன் RMA |